# தனது மோசமான எதிரிகளை தாவீது மன்னித்தான்

பிள்ளைகளின் வயதுக்கும் தேவைக்கும் பொருத்தமான நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க. நீங்கள் விரும்பும் எந்த முறையிலும் அவைகளைச் செய்யலாம்.

**ஜெபம்:** "அன்பான கர்த்தாவே, முழுவதும் பரிசுத்தத்திலும் அன்பிலும் நிறைந்து நாங்கள் உம்மைப் போல் புனிதமாக இருக்க நீர் விரும்புகிறீர். உமது பரிசுத்த ஆவியின் வல்லமையால் நீர் விரும்புகிற நபர்களாக நாங்கள் இருக்க தாவீதின் உதாரணத்தின் மூலமாக எங்களுக்கு உதவுவீராக. எங்கள் பாவங்களை மன்னித்து தாவீதைப் போல நாங்களும் பிறரை மன்னிக்க உதவும். ஆமென்!"

**போதிக்க ஆயத்தப்படுக:** நாம் வெள்ளாடை அணிந்து திகழும் பரலோகத்தைப் பற்றி வெளி.9-17ல் வாசிக்கவும்.



இங்கே காணப்படும் உடையைப் போல ஒன்றை குழந்தைகள் நகலெடுக்க **வரைந்து** காட்டுங்கள்.

- தமது பரிசுத்தத்தாலும் அன்பாலும் நம்மை உடுத்துவிக்க தேவன் விரும்புகிறார் என்பதை இந்த ஆடை காட்டுகிறது.
- நாம் அவருடைய பார்வையில் பரிசுத்தமாக, தூய்மையாக, நல்லவர்களாகத் திகழவே நம்மைப் படைத்தார் என்பதை உணர்த்த தேவன் நமக்கு வெண்ணங்கிகளைத் தருவார்.
- தாவீது தன் எதிரியான சவுலை எவ்வாறு மன்னித்தான் என்பதை வாசித்தோ அல்லது மனப்பாடமாகவோ கூறவும் (1 சாமு. 24:1-22).
- இந்தக் கதையை மனப்பாடமாகக் கூற முன்கூட்டியே ஒரு பெரிய பிள்ளையை ஆயத்தம் செய்க.
- தாவீது தன் எதிரிகளையும் எவ்வாறு கண்ணியத்தோடு நடத்தினான் என்பதை கவனித்துக் கண்டறியுமாறு கதையைக் கூறுவதற்கு முன் குழந்தைகளிடம் கூறவும்.

குழந்தைகளைக் **கேட்கவும்.**

- மோசமான அரசனான சவுல், தாவீதுக்கு என்ன செய்ய விரும்பினான்?
- தனது எதிரியான சவுலைக் கொல்ல தாவீதுக்குக் கிடைத்த சந்தர்ப்பம் என்ன?
- தாவீது தன் எதிரியைப் பழி வாங்கினானா?
- இஸ்ரவேலின் மன்னனாக தாவீது பலவந்தமான வழிமுறைகளைக் கையாண்டானா?
- தனது உயிரைக் காப்பாற்றிய தாவீது எப்படிப்பட்ட மனிதன் என்று சவுல் கூறினான்?
- தாவீதை கொல்ல முயன்ற சவுல் ஏன் தன்னைப் பற்றி மோசமாக உணர்ந்தான்?

சிறிய பிள்ளைகள் **மத்.5:44** ஐ மனனம் செய்க.

பெரியபிள்ளைகள் **கலா.5:22 & 23** ஐ மனனம் செய்க.

**சங்கீதம்:** சங்.15:1,2,3, ஐ மூன்று சிறுவர்கள் ஒப்புவிக்கவும்.

தாவீது சவுலை மன்னித்த நிகழ்ச்சியை **நாடகமாக்குக.** (1 சாமு.24).

- ஆராதனை வேளையின் போது பெரியவர்களுக்கு நடித்துக் காட்ட ஒத்திகை பார்க்கவும்.
- இந்த பயிற்சியே பிள்ளைகளுக்கு ஒரு கற்பிக்கும் நேரமாக இருக்கட்டும்.
- முடிந்தால் ஒன்றோ இரண்டோ ஆண்கள் பிள்ளைகளோடு சேர்ந்து வீரர்களாக நடிக்கலாம்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ளவைகளைத்தான் பிள்ளைகள் பேச வேண்டும் என்பதில்லை. தங்களை சவுலாக, தாவீதாக, வீரர்களாக கற்பனை செய்துகொள்ள முடியுமானால் அவர்கள் பேச வேண்டியதைக் கட்டுப்படுத்த அவசியமில்லை. சவுல் அல்லது தாவீது பேசி இருக்கலாம் என்று நினைப்பதை பிள்ளைகள் சொந்தமாக சேர்த்துக் கொள்ளலாம்.

- **சிறிய குழந்தைகளை** ஆயத்தம் செய்ய பெரிய பிள்ளைகள் உதவட்டும்.
- நாடகத்தை நடித்த பின் அதைப்பற்றிய கேள்விகளை சிறுவர்கள் பெரியவர்களிடம் கேட்கவும்.
- **பெரிய பிள்ளைகள்** (அல்லது ஆண்கள்) இந்த வேடங்களில் நடிக்கலாம்.

**சவுல்:** ஒரு போர்வையை மேலங்கியாக போட்டுக்கொள்ளவும்.

**தாவீது:** (ஒரு பெரிய பிள்ளை நடிக்கவும்) மரம் அல்லது அட்டையில் ஒரு வாளையும், சவுலின் மேலங்கி நிறத்தில் ஒரு துண்டு துணியையும் வைத்துக் கொள்ளவும். சவுலின் மேல் அங்கியை வெட்டும் காட்சி வரும் வரை இந்தத் துண்டுத் துணியை மறைத்து வைத்துக் கொள்க).

**சவுலின் வீரர்கள்** (இளம் சிறுவர்கள்: ஒரு பெரியவரோ அல்லது பெரிய பிள்ளையோ வீரராக இருக்கலாம்).

**தாவீதின் வீரர்கள்** (இளம் சிறுவர்கள்: ஒரு பெரியவரோ அல்லது பெரிய குழந்தையோ சேர்ந்து கொள்ளலாம்).

**நாடகம்:**

**தாவீதும் வீரர்களும்:** சவுலிடம் இருந்து மறைந்து, புதர்களைக் குறிக்கும் நாற்காலிக்குப் பின், பதுங்கி, அறையின் ஒரு பக்கம் செல்ல.

**சவுல்** : தாவீது பதுங்கி இருக்கும் பக்கம் செல்க. ஆனால் வேறுபுறமாக நோக்கவும் சத்தம் போட்டு, “என்னுடைய வீரர்களே! கேளுங்கள்! நான் தாவீதை வெறுக்கிறேன். என்னை விடவும் மக்கள் அவனை மிகவும் விரும்புகின்றனர். ஆனால் நான்தான் இராஜா! நானே சவுல் இராஜா! போங்கள்! போய்த் தேடி தாவீதை இப்போதே கொல்லுங்கள்.”

**சவுலின் வீரர்கள்:** “சரி மன்னா” வணக்கம் கூறி கத்துகின்றனர், “நாங்கள் அவனைக் கொல்லுவோம்”. “வாருங்கள் இந்தப் பக்கமாகப் போவோம்” (சவுல் அங்கேயே இருக்க, தாவீதும் அவனது வீரர்களும் இருக்கும் இடத்தை விட்டு வேறு புறமாக செல்க).

**சவுல்** : (மேலங்கியைக் கழற்றி அருகில் வைத்து, வேறுபுறம் திரும்பி, தூங்குவது போல் நடிக்கவும்).

**தாவீதின் வீரர்கள்:** “தாவீது இராஜாவே! பாரும்! உமது எதிரியான சவுல் ஒய்வு எடுக்கிறான்! போய் அவனைக் கொல்லும்.”

**தாவீது** : வாளை கையில் வைத்துக் கொண்டு, சவுலுக்கு பின்னாகச் சென்று,

**தாவீதின் வீரர்கள்:** “அவனைக் கொல்லும்” “அவன் உமது எதிரி”.

**தாவீது** : “இல்லை” நான் அவரைக் கொல்ல மாட்டேன். அவர் இஸ்ரவேலை ஆள தேவனால் “அபிஷேகம் பண்ணப்பட்டவர்”

**தாவீதின் வீரர்கள்:** “அவனை இப்போதே கொல்லும்!” வாய்ப்பு கிடைக்கும்போதே கொன்று போடும்!”

**தாவீது** : சவுலின் மேலங்கியில் ஒரு துண்டை வெட்டுவது போல நடிக்கவும். தூக்கிப் பிடித்து, வீரர்களிடம் திரும்பி வந்து, பின் சத்தமாக சவுலை நோக்கி பேசவும். “இராஜாவே! இதோ பாரும்! உமது மேலங்கியின் ஒரு துண்டு என் கையில் இருப்பதைப் பாரும். அதை நான் தான் வெட்டினேன். ஆனால் உம்மைக் கொல்லவில்லை. தவறானதை செய்தோ, கலகம் செய்தோ நான் குற்றம் செய்ய வில்லை. நான் உமக்கு துரோகம் செய்யவில்லை. ஆனால் என்னைக் கொல்லுவதற்கு நீர் வேட்டையாடுகிறீர்.”

**சவுல்** : “என் மகனே, தாவீது! நீயா அது! நான் மிகவும் வருத்தப்படுகிறேன் (கண்களை துடைத்து). என்னைவிட நீ நீதிமான். நீ என்னை நன்றாக நடத்தினாய். ஆனால் நான் உன்னிடம் மோசமாக நடந்து கொண்டேன். தேவன் என்னை உனது கையில் ஒப்புக் கொடுத்தும் நீ என்னைக் கொல்லவில்லை. நீ இஸ்ரவேலின் இராஜா ஆவாய் என்பதை நான் அறிகிறேன்.”

மற்றவர்களை மன்னிப்பது குறித்து **பெரிய பிள்ளைகள் கவிதையோ அல்லது பாடலோ எழுதட்டும்.**